Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmail.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | புதன், பிப்ரவரி 19, 2025 | இதழ் 312

# இருதரப்பு பொருளாதார உறவுகளை வலுப்படுத்த இந்தியா-கத்தார் கூட்டு வணிக அமைப்பின் கூட்டம் நடைபெற்றது



சென்னை, 19 பிப்ரவரி 2025: கத்தார் நாட்டின் அமீர் மேதகு ஷேக் தமீம் பின் ஹமாத் பின் கலிஃபா அல் தானியின் இந்தியப் பயணத்திற்கு (பிப்ரவரி 17-18) இடையில் மத்திய தொழில்கள் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறையின் ஒத்துழைப்புடன் இந்திய தொழில்கள் கூட்டமைப்பு இன்று (2025 பிப்ரவரி 18) இந்தியா-கத்தார் கூட்டு வணிக அமைப்பின் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தது. இந்தக் கூட்டத்தில் மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்கள் அமைச்சர் திரு பியூஷ் கோயல், கத்தார் நாட்டின் தொழில் வர்த்தகத் துறை அமைச்சர் ஷேக் ஃபைசல் பின் தானி பின் ஃபைசல் அல் தானி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தின் தொடக்க அமர்வில் உரையாற்றிய திரு பியூஷ் கோயல், 2047 ஆண்டிற்குள் 30 முதல் 35 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக மாறுவதற்கான இந்தியாவின் விருப்பத்தை வெளிப்படுத்தினார். இது வளர்ச்சியடைந்த பாரதம் என்ற தொலைநோக்குப் பார்வையுடன் இணைந்தது என்றும் அவர் கூறினார். இந்தியாவும், கத்தாரும் வெற்றிகரமான எரிசக்தி வணிகத்தில் நீண்ட வரலாற்றைப் பகிர்ந்து கொள்வதோடு பெட்ரோலியப் பொருட்களுக்கு அப்பால் செயற்கை நுண்ணறிவு, குவாண்டம் கம்ப்யூட்டிங், ஐஓடி, செமி கண்டக்டர்கள் போன்ற நவீன துறைகளிலும் கூட்டாண்மையை எதிர்காலத்தில் மேற்கொள்ளும் என்று அவர் குறிப்பிட்டார்.

இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய கத்தார் அமைச்சர் ஷேக் ஃபைசல் பின் தானி பின் ஃபைசல் ட்அல் தானி, கத்தார்- இந்தியா இடையேயான நட்புறவு வெறுமனே பரிமாற்றத்தை மட்டுமே கொண்டதல்ல என்றும், பரஸ்பர மதிப்பு, பகிரப்பட்ட நலன்கள், பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்தும் உறுதி ஆகியவற்றின் மீது கட்டப்பட்ட பாரம்பரியம் என்றும் கூறினார். பன்முகமான, ஆற்றல் கொண்ட, முதலீட்டாளர்களுக்கு உகந்த இடமாக கத்தார் விளங்குகிறது என்றும் அங்குள்ள வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ள இந்திய முதலீட்டாளர்களுக்கு அன்பான அழைப்பு விடுப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தொழில் வர்த்தகத் துறை இணையமைச்சர் திரு ஜித்தின் பிரசாதா, கத்தார் நாட்டின் வெளிநாட்டு வர்த்தக விவகாரங்கள் துறை இணையமைச்சர் டாக்டர் அகமது ஹல் சயீத், மத்திய தொழில்கள் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறை இணைச் செயலாளர் திரு சஞ்சீவ், இந்திய தொழில்கள் கூட்டமைப்பின் தலைவர் திரு சஞ்சீவ் பூரி ஆகியோரும் இந்த கூட்டு கூட்டத்தில் உரையாற்றினர்.

# அஞ்சல் துறை சார்பில் வசந்த கால திருவிழா



சென்னை, 19 பிப்ரவரி 2025: அஞ்சல் துறை சார்பில், வசந்த கால திருவிழா கொண்டாடப்பட்டு வருகிறது. இது 2025 பிப்ரவரி 10 முதல் 28 தேதி வரை கொண்டாடப்படுகிறது. வசந்த காலத்தில் உணர்வை அனுபவிக்க ஒரு வாய்ப்பாக இந்த விழா உள்ளது.

இந்த விழாவின் முக்கிய கட்டமாக மத்திய அஞ்சல் மணடலம் சார்பில், அஞ்சல் ஊழியர்களுக்கு தோட்டக்கலை குறித்த பயிலரங்கு நடத்தப்பட்டது. மத்திய மண்டல் அஞ்சல் துறை தலைவர் திருமதி டி. நிர்மலா தேவி பயிலரங்கிற்கு தலைமை ஏற்று சிறப்புரை ஆற்றினார். சிறப்புரையில், ஊழியர்கள் அனைவரும் தோட்டக்கலை குறித்த சந்தேகத்தை, அந்த துறையை சேர்ந்த அலுவலர்களிடம் இருந்து கற்கும் வாய்ப்பாக இந்த பயிலரங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று கூறினார். லால்குடி, தோட்டக்கலை உதவி இயக்குனர் திரு. டி. தனசேகர், மருங்காபுரி, உதவி தோட்டக்கலை அலுவலர் திரு. எஸ். பாக்கியராஜ் ஆகியோர் மூலம் இந்த பயிலரங்கு நடத்தப்பட்டது.

இந்த பயிலரங்கில், மாடி, சமையலறை தோட்டம் அமைக்கும் முறைகள், அதற்கு தேவையான உபகரணங்கள், பராமரிக்கும் முறைகள் குறித்து விளக்கப் பட்டது. இயற்கை முறையில் பூச்சி விரட்டி தயாரிக்கும் முறை, வீட்டிலேயே கீரைகள்/காய்கறிகள் உற்பத்தி செய்யும் முறை குறித்தும் செய்முறை விளக்கம் அளிக்கப்பட்டது.

இந்த பயிலரங்கில் திருச்சி மண்டல அலுவலகம், திருச்சி கோட்டம், திருச்சி ரயில்வே அஞ்சல் கோட்டத்தினை சேர்ந்த உதவி இயக்குநர்கள், முதுநிலை அஞ்சல் கண்காணிப்பாளர்கள், உதவி அஞ்சல் கண்காணிப்பாளர்கள், தபால் அதிகாரிகள், எழுத்தர்கள், தபால்காரரர்கள், பன்முக திறன் பணியாளர்கள், உட்பட 150-க்கும் மேற்பட்ட அஞ்சல் ஊழியர்கள் மிகுந்த உற்சாகத்துடனும், ஆர்வத்துடனும் கலந்துகொண்டனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை திருச்சிராப்பள்ளி முதுநிலை கோட்ட கண்கணிப்பாளர் திரு பிரகாஷ், திருச்சி மண்டல அலுவலக உதவி இயக்குநர் திரு பசுபதி ஆகியோர் செய்திருந்தனர்.

# உலக உணவு இந்தியா கண்காட்சி-2024 நடத்துவது குறித்து அதிகாரிகளுடன் வட்டமேசை உரையாடல்



சென்னை, 19 பிப்ரவரி 2025:மத்திய உணவு பதப்படுத்தும் தொழில்கள் அமைச்சகமானது மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களின் குடியிருப்பு ஆணையர்களுடனும் பிரதிநிதிகளுடனும், 2025 பிப்ரவரி 17, வட்டமேசை உரையாடலை நடத்தியது. இதற்கு அமைச்சகத்தின் செயலாளர் தலைமை வகித்தார். உலக உணவு இந்தியா 2025 கண்காட்சிக்கு மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் ஒத்துழைப்பு அளிப்பது குறித்து இதில் விவாதிக்கப்பட்டது.

உணவு பதப் படுத்தும் துறையின் கூடுதல் செயலாளர் திரு மின்ஹாஜ் ஆலம் தனது வரவேற்பு உரையில், இந்த உலக உணவு இந்தியா நிகழ்வு மாநிலங்கள், யூனியன் பிரதேசங் களுக்கு தங்களின் வாய்ப்புகளை வெளிப்படுத்தவும், உலகளாவிய, உள்நாட்டு வணிக நிறுவனங்கள், விநியோகஸ்தர்கள், தொழில் நுட்ப துறையினருடன் ஒத்துழைப்பை வலுப்படுத்திக் கொள்ளவும் ஒரு தளத்தை வழங்கும் என்று எடுத்து ரைத்தார். உலக உணவு இந்தியா 2025 என்ற நிகழ்வு 2025 செப்டம்பர் 25 முதல் 28 வரை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் ஏற்கனவே நடந்த நிகழ்வுகளை விட மிகப் பெரிய அளவில் இதை நடத்த திட்டமிடப் பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். உணவுப் பதப்படுத்தும் துறை இணைச் செயலாளர் திரு டி. பிரவீன் தமது நிறைவுரையில், இந்திய உணவு பதப்படுத்தும் துறையின் வலிமையை எடுத்துக்காட்ட, இந்த நிகழ்வில் தங்கள் மத்திய உணவு பதப்படுத்துதல் துறை அமைச்சகத்துடன் மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் இணைந்து தீவிரமாகப் பங்கேற்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

# 12 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு திருச்சி, மதுரையில் ரூ.717 கோடி செலவில் டைடல் பூங்காக்கள் முதல்வர் ஸ்டாலின் அடிக்கல்



சென்னை, 19 பிப்ரவரி 2025: ரூ.717 கோடி மதிப்பீட்டில், 12,000 தகவல் தொழில்நுட்ப பணியாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் திருச்சி மற்றும் மதுரையில் டைடல் பூங்காக்கள் அமைப்பதற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்.

இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாக விளங்கி வரும் தமிழ்நாட்டினை, 2030-ஆம் ஆண்டிற்குள் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக உயர்த்திட வேண்டும் என்று முதலமைச்சர் இலக்கு நிர்ணயித்துள்ளார். அந்த இலக்கினை விரைவில் எய்திடும் வகையில் அதிக முதலீடுகளை ஈர்த்திடவும், தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கிடவும் தமிழ்நாடு அரசு பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது. முதலீடுகளை ஈர்ப்பதிலும், அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை, குறிப்பாக பெண்களுக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும் தமிழ்நாடு அரசு சிறப்பாக செயல்படுவதாக, ஒன்றிய அரசின் 2024-25 ஆம் ஆண்டிற்கான பொருளாதார ஆய்வறிக்கையில் புகழாரம் சூட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

2000ம் ஆண்டு கருணாநிதி தொலை நோக்கு பார்வையுடன் சென்னை தரமணியில் டைடல் பூங்காவை நிறுவி, திறந்து வைத்தார். இது மாநிலத்தில் தகவல் தொழில்நுட்பத்துறை மாபெரும் வளர்ச்சி பெற வித்திட்டது. அதனைத்தொடர்ந்து தமிழ்நாட்டின் தகவல் தொழில்நுட்ப சூழல் அமைப்பினை மாநிலம் முழுவதும் விரிவுபடுத்தும் வகையில், இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில் மினி டைடல் பூங்காக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில், விழுப்புரம், தஞ்சாவூர், தூத்துக்குடி மற்றும் சேலம் மாவட்டங்களில் மினி டைடல் பூங்காக்கள் அமைக்கப்பட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்துள்ளார். மேலும், திருவள்ளூர் மாவட்டம், பட்டாபிராமில் ரூ.330 கோடி செலவில் தரை மற்றும் 21 தளங்களுடன் அதிநவீன உள்கட்டமைப்பு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள மாபெரும் டைடல் பூங்காவை முதலமைச்சர் 22.11.2024 அன்று திறந்து வைத்தார்.

திருச்சியில் டைடல் பூங்கா - தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி சூழல் அமைப்பை பரவலாக்கும் முயற்சியின் அடுத்தகட்டமாக, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பஞ்சப்பூரில், ரூ.403 கோடி மதிப்பீட்டில் 5.58 லட்சம் சதுரஅடி பரப்பளவில் தரை மற்றும் ஆறு தளங்களுடன் ஐடி, ஐடிஇஎஸ், பிபிஓஎஸ், ஸ்டார்ட்அப்ஸ் போன்ற நிறுவனங்கள் இடம் பெறும் வகையில் புதிய டைடல் பூங்கா அமைப்பதற்கு முதலமைச்சர் இன்று அடிக்கல் நாட்டினார்.

மதுரை டைடல் பூங்கா - மேலும், மதுரை மாவட்டத்தில், மதுரை மாநகராட்சிக்குட்பட்ட மாட்டுத்தாவணியில் 314 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5.34 லட்சம் சதுர அடி பரப்பளவில் தரை மற்றும் பன்னிரண்டு தளங்களுடன், மிஜி, மிஜிணிஷி, நிறிளிஎ, ஷிமீணீக்ஷீமீ ஹூ ஜீஎ போன்ற நிறுவனங்கள் இடம் பெறும் வகையில் புதிய டைடல் பூங்கா அமைப்பதற்கு முதலமைச்சர் இன்று அடிக்கல் நாட்டினார்.

இப்பூங்காக்கள் சுமார் 12,000 தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள் பணிபுரியும் வகையில் ஒருங்கிணைந்த கட்டட மேலாண்மை அமைப்பு, குளிர்சாதன வசதிகள், 24ஙீ7 பாதுகாப்பு வசதிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய அதிநவீன வசதிகளுடன் அமைக்கப்படவுள்ளன. இதன் மூலம், திருச்சிராப்பள்ளி, மதுரை மாவட்டங்கள் மற்றும் அவற்றின் சுற்றுப்புற மாவட்டங்களைச் சேர்ந்த படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெறுவதுடன் அம்மாவட்டங்களின் சமூக பொருளாதார நிலையும் மேம்படும்.

இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு, பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தக துறை செயலாளர் வி. அருண் ராய், டிட்கோ மற்றும் டைடல் பார்க் மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# வேவ்ஸ் முன்னோட்ட காட்சிகள் தயாரிப்புப் போட்டி

சென்னை, 19 பிப்ரவரி 2025: வேவ்ஸ் எனப்படும் உலக ஒலி-ஒளி பொழுதுபோக்கு உச்சிமாநாட்டின் ஒருபகுதியாக முன்னோட்ட காட்சிகள் (டிரெய்லர்) தயாரிப்புப் போட்டி நடத்தப்படுகிறது. இது நெட்ஃபிளிக்ஸின் விரிவான உள்ளடக்கத்தைப் பயன்படுத்தி கவர்ச்சிகரமான டிரெய்லர்களை வடிவமைக்க ஆர்வமுள்ள பங்கேற்பாளர்களுக்கு ஒரு அற்புதமான வாய்ப்பை வழங்குகிறது. அதாவது பங்கேற்பாளர்கள் தங்கள் படைப்புத் திறன்களை வெளிப்படுத்த ஒரு தளத்தை வழங்குகிறது. தகவல், ஒலிபரப்பு அமைச்சகம், நெட்ஃபிளிக்ஸ் ஆகியவை இணைந்து இந்த டிரெய்லர் போட்டிக்கு ஏற்பாடு செய்துள்ளன. இந்தப் போட்டி அடுத்த தலைமுறை உள்ளடக்க படைப்பாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் நடத்தப்படுகிறது.

மும்பையில் 2025 மே 1 முதல் 4 வரை நடைபெறும் வேவ்ஸ் உச்சிமாநாடு, ஊடக, பொழுதுபோக்கு துறையில் ஒரு முக்கிய நிகழ்வாக இருக்கும்.

டிரெய்லர் போட்டியில் பங்கேற்பதற்கான தகுதிகள்: வீடியோ எடிட்டிங், திரைப்படத் தயாரிப்பு அல்லது உள்ளடக்க உருவாக் கத்தில் ஆர்வமுள்ள மாணவர்கள், ஆர்வமுள்ள திரைப்படக் கலைஞர்கள் இந்தப் போட்டியில் பங்கேற் கலாம். விண்ணப்ப தாரர்கள் பங்கேற்க குறைந்தபட்சம் 18 வயதுடையவர்களாக இருக்க வேண்டும். யூடைப்பாற்றல், கதைசொல்லல், தொழில்நுட்ப செயல்பாடு, ஒட்டுமொத்த தாக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் வல்லுநர்கள் குழு டிரெய்லர்களை மதிப்பீடு செய்யும்.

பதிவு விவரங்கள்: பதிவுகள் தற்போது தொடங்கியுள்ளன. 2025 மார்ச் 31 வரை பதிவுகளை பதிவுகளை சமர்ப்பிக்கலாம். 2025 பிப்ரவரி 15, நிலவரப்படி, உலகம் முழுவதிலுமிருந்து மொத்தம் 3,313 பங்கேற்பாளர்கள் பதிவு செய்துள்ளனர். இந்தப் போட்டி பல்வேறு வகையான பங்கேற்பாளர்களை ஈர்த்துள்ளது.

தமிழ் மக்கள் குரல்
உள்ளது உள்ளபடி
புதன்,
பிப்ரவரி 19, 2025

# டெக்னிப் ஏனெர்ஜீஸ் நிறுவனம் ஒரு புதிய அலுவலகம் மற்றும் ஒரு ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்பு மையத்துடன் இந்தியாவில் விரிவாக்கம் செய்கிறது



சென்னை 19, பிப்ரவரி 2025: டெக்னிப் எனர்ஜீஸ் நிறுவனம், அகமதாபாத்திற்கு அருகில் உள்ள குஜராத் இன்டர்நேஷனல் ஃபைனான்ஸ் டெக்-சிட்டி (கிஃப்ட் சிட்டி) இல் ஒரு புதிய அலுவலகத்தைத் திறக்கின்றதன் மூலம் மற்றும் சென்னையில் உள்ள இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி மெட்ராஸ் (ஐஐடிஎம்) ரிசர்ச் பார்க்கில் ஒரு நவீன ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்பு மையத்தைத் திறக்கின்றதன் மூலம் இந்தியாவில் ஒரு மூலோபாய விரிவாக்கத்தை அறிவித்துள்ளது. .

உள்நாட்டு மற்றும் உலகளாவிய வாடிக்கையாளர்களுக்கு புதுமையான, நிலையான மற்றும் செலவு-குறைந்த ஆற்றல் தீர்வுகளை வழங்குவதற்கு நிறுவனத்திற்கு உதவுகின்ற இந்த மூலோபாய முயற்சிகள், டெக்னிப் எனர்ஜீஸ் நிறுவனத்தின் இந்திய இருப்பை வலுப் படுத்துகின்றன.

அகமதாபாத்தில் உள்ள இந்த புதிய அலுவலகம் இந்தியாவில் டெக்னிப் எனர்ஜீஸ் நிறுவனத்தின் நான்காவது செயல்பாட்டு மையமாகும். இந்தியாவின் முதல் செயல்பாட்டு ஸ்மார்ட் சிட்டியான கிஃப்ட் சிட்டி இல் அகமதாபாத் மற்றும் காந்திநகர் இடையே மூலோபாய ரீதியாக அமைந்துள்ள உலகத் தரம் வாய்ந்த வசதிகள் மற்றும் ஒரு வணிக-நட்பு சூழல் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு செழிப்பான சுற்றுச் சூழல் அமைப்பை வழங்கும். குஜராத்தின் திறமையான திறமைக் குழு மற்றும் வலுவான உள் கட்டமைப்புக்கான அணுகலுடன், டெக்னிப் எனர்ஜீஸ் நிறுவனத்தின் விரிவாக்கத்தை ஆதரிக்கின்ற அதே வேளையில் பிராந்தியத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்கின்ற வகையில் இந்த புதிய அலுவலகம் 2025 ஆம் ஆண்டில் சுமார் 300 நபர்களை பணியமர்த்தும்.

டெக்னிப் எனர்ஜீஸ் நிறுவனத்தின் நான்காவது உலகளாவிய ஆய்வகத்தை வழங்குகின்ற ஐஐடிஎம் ரிசர்ச் பார்க்கில் உள்ள இந்த ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்பு மையம், ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் உள்ள நிறுவனத்தின் தற்போதைய தொழில் நுட்ப மையங்களில் இணைகிறது. இந்த அதிநவீன வசதி, டெக்னிப் எனர்ஜீஸ் நிறுவனத்தின் முக்கிய சந்தைகளான குறைந்த கார்பன் ஆற்றல் வழித்தோன்றல்கள், தொழில்துறை டிகார்பனைசேஷன் மற்றும் சுழற்சித் தன்மை ஆகியவற்றுடன் இணைந்த முக்கியமான பகுதிகளில் ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியில் கவனம் செலுத்தும்.

டெக்னிப் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி அர்னாட் பைட்டன் கூறுகையில், "இந்தியா எங்கள் உலகளாவிய மூலோபாயத்தின் ஒரு அடித்தளமாக இருக்கிறது. இந்தியாவில் எங்கள் விரிவாக்கம், அதன் தொழில்துறை வளர்ச்சி லட்சியங்களை ஆதரிக்கின்ற அதே வேளையில் உலகின் மிகப்பெரிய மாற்றங்களில் ஒன்றான நாட்டின் சுற்றுச் சூழல் உகந்த ஆற்றல் மாற் றத்தை விரைவுபடுத்துவதற்கான எங்கள் உறுதிப்பாட்டை பிரதிபலிக்கிறது. ஒவ்வொரு ஆண்டும், சுமார் 1.5 மில்லியன் புதிய பொறியியலாளர்கள் இந்தியாவில் பட்டம் பெறுகின்றனர். இந்தியாவின் திறமைகள் மற்றும் ஆராய்ச்சி சுற்றுச்சூழலை எங்கள் உலகளாவிய நிபுணத்துவத்துடன் இணைப்பதன் மூலம், உலகளாவிய தொழில்துறைகள் மற்றும் சமூகங்களுக்கான அதிநவீன, அளவிடக்கூடிய மற்றும் நிலையான அடுத்த தலைமுறை ஆற்றல் தீர்வுகளை நாங்கள் வடிவமைக்கின்றோம்." என்று கூறினார்.

டெக்னிப் எனர்ஜீஸ் இந்தியா நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் தவேந்திர குமார் கூறுகையில், "புதுமை, திறமை மற்றும் நிலைத்தன்மைக்கான ஒரு அசைக்கமுடியாத அர்ப்பணிப்பு ஆகியவற்றால் உந்தப்பட்ட இந்தியா உலகளாவிய ஆற்றல் மாற்றத்தின் முன்னணியில் நிற்கிறது. அகமதாபாத்தில் எங்கள் புதிய அலுவலகம் மற்றும் ஐஐடிஎம் ரிசர்ச் பார்க்கில் உள்ள ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்பு மையம் ஆகியவற்றின் மூலம், ஒரு தொழில்நுட்ப மற்றும் பொறியியல் சக்தி ஆதாரமாக மட்டுமல்ல, குறைந்த கார்பன் எதிர்காலத்தை நோக்கிய இந்தியாவின் பயணத்திற்கான ஒரு முக்கிய செயல்பாட்டாளராகவும் நாங்கள் இந்தியாவில் எங்கள் வேரூன்றலை ஆழப்படுத்துகிறோம். இந்த முயற்சிகள் சுயதேவைக்கான தீர்வுகளை ஊக்குவிக்கும், உயர் மதிப்புள்ள வேலை வாய்ப்புகளை உருவாக்கும், மேலும் சுத்தமான ஆற்றல் கண்டுபிடிப்பின் ஒரு மையமாக இந்தியாவின் நிலையை வலுப் படுத்தும்." என்று கூறினார்.

இந்தியாவின் முதல் பல்கலைக்கழக-சார்ந்த ஆராய்ச்சி பூங்காவான ஐஐடிஎம் ரிசர்ச் பார்க், கல்வித்துறை, தொழில்துறை, அரசு மற்றும் தொடக்க நிறுவனங்கள் ஆகியவற்றை ஒன்றிணைக்கிறது. இது உயர் திறமை,

அதிநவீன தொழில்நுட்பங்கள் மற்றும் சிறப்பு மையங்களுக்கான அணுகலை வழங்குகிறது. ஆற்றல் துறையில் அதன் பல தசாப்த அனுபவத்தைப் பயன்படுத்துவதன் மூலம், தொழில் நுட்பங்களை அளவிடுவதற்கும் வணிகமயமாக்குவதற்கும், மலிவு விலையில் மற்றும் நிலையான தீர்வுகளை உருவாக்குவதற்கும் இந்த வளங்கள், டெக்னிப் எனர்ஜீஸ் நிறுவனத்திற்கு உதவும்.

டெக்னிப் எனர்ஜீஸ் இந்தியாவில் ஐந்து தசாப்தங்களுக்கும் மேலான வரலாற்றுடன் ஒரு நீண்டகால இருப்பைக் கொண்டுள்ளது. சென்னை, டெல்லி மற்றும் மும்பை போன்ற முக்கிய இடங்களில் அலுவலகங்கள் மற்றும் 4,600 பணியாளர்களின் ஒரு அடித்தளத்தைக் கொண்டு இந்த நிறுவனம் இந்தியாவில் ஒரு வலுவான இருப்பை நிறுவியுள்ளது. குஜராத் மாநிலத்தில் உள்ள தாஹேஜில் ஒரு அர்ப்பணிப்பான உற்பத்தி அலகுடன் இணைந்த இந்த விரிவான முன்னிலை, உலகளாவிய திட்டங்களுக்கும் பங்களிக்கின்ற அதே வேளையில் விரிவடைந்து வரும் இந்திய சந்தைக்கு சேவை செய்ய டெக்னிப் எனர்ஜீஸ் நிறுவனத்தை அனுமதிக்கிறது.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

# காற்றின் ஈரப்பதத்திலிருந்து தண்ணீரை உற்பத்தி செய்யும் யூனிட்டை நிறுவும் ஐசிஐசிஐ வங்கி




மும்பை, 19 பிப்ரவரி 2025: ஐசிஐசிஐ வங்கியானது செயல்பாடுகளின் நிலைத்தன்மையை மேம்படுத்துவதற்கான உறுதிப்பாட்டின் ஒரு பகுதியாக, வளிமண்டல ஈரப்பதத்திலிருந்து குடிநீரை உற்பத்தி செய்வதற்கான அதிநவீன தொழில் நுட்பத்தை ஏற்றுக் கொள்வதாக அறிவித்துள்ளது. அதன்படி, வளிமண்டல ஈரப்பதத்திலிருந்து ஒரு நாளைக்கு 8,000 லிட்டர் குடிநீர் உற்பத்தி செய்யும் யூனிட்டை நிறுவியுள்ளது, இதன் மூலம் பெங்களூரு, ஹைதராபாத் மற்றும் மும்பையில் தலா ஒன்று மற்றும் சென்னையில் இரண்டு அலுவலகங்களில் 4,200 ஊழியர்கள் இதனால் பயனடைவார்கள்.

வளிமண்டல நீர் ஜெனரேட்டர்கள் (ஏடபிள்யுஜிஎஸ்) எனப்படும் இந்த யூனிட் ஆனது, வளிமண்டல ஈரப்பதத்தை 100% நுண்ணுயிர் இல்லாத, புதிய மற்றும் சுத்தமான குடிநீராக மாற்ற புதுமையான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகின்றன. ஒடுக்கம் செயல்முறை நீர் நீராவியை நீர்த்துளிகளாக மாற்றுகிறது, பின்னர் அவை பல வடிகட்டுதல் செயல்முறைகளுக்கு உட்படுகின்றன. செயல்முறையின் முடிவில் அத்தியாவசிய தாதுக்கள் சேர்க்கப்படுகின்றன. இந்த ஏடபிள்யுஜிஎஸ் பரந்த அளவிலான சுற்றுப்புற வெப்ப நிலையில் (18 டிகிரி செல்சியஸ் - 45 டிகிரி செல்சியஸ்) மற்றும் ஈரப்பதத்தில் (25%-100%) செயல்பட முடியும் என்பதால், ஆண்டு முழுவதும் தண்ணீரை உற்பத்தி செய்ய முடியும்.

ஐசிஐசிஐ வங்கியின் குழும தலைமை மனிதவள அதிகாரி திரு. சௌமேந்திர மட்டகஜாசிங் கூறுகையில், "ஐசிஐசிஐ வங்கியானது சுற்றுச் சூழலிலை பேணி காக்கும் வகையில் வணிகத்தை நிலையானதாகவும் பொறுப்புடனும் நடத்த உறுதி கொண்டுள்ளது. அதன்படி, சுற்றுச்சூழல் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கான எங்கள் உத்தி சுற்றுச் சூழல் மேற் பார்வையின் 4ஆர் (குறைத்தல், மறுபயன்பாடு, மறுசுழற்சி மற்றும் பொறுப்பான அகற்றல்) கொள்கையால் வழிநடத்தப்படுகிறது. ஆக, பூமியின் அனைத்து ஆறுகளிலும் உள்ள நன்னீரை விட வளிமண்டல ஈரப்பதம் பல மடங்கு அதிகமாக இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த புதுப்பிக்கத்தக்க வளத்தைப் பயன்படுத்த, நீராவியை குடிநீராக மாற்ற எங்கள் அலுவலகங்களில் ஏடபிள்யுஜிஎஸ்-களை நிறுவியுள்ளோம். இந்த முயற்சி வளிமண்டல ஈரப்பதத்தை நன்கு பயன்படுத்துவதோடு, தொகுக்கப்பட்ட தண்ணீரைச் சார்ந்திருப்பதையும் குறைக்கிறது.

ஐசிஐசிஐ வங்கி அதன் இஎஸ்ஜி கொள்கையின் கீழ் நிலைத்தன்மையை நோக்கிய முயற்சிகளை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. 2032 நிதியாண்டிற்குள் ஸ்கோப் 1 மற்றும் ஸ்கோப் 2 உமிழ்வுகளில் கார்பன் இல்லாத செயல்பாட்டுக்கு செல்வதில் வங்கி இலக்கு நிர்ணயித்துள்ளது. 4.95 மில்லியன் சதுர அடி பரப்பளவில் வங்கியின் 180 க்கும் மேற்பட்ட தளங்கள் மார்ச் 31, 2024 நிலவரப்படி இந்திய பசுமை கட்டிட கவுன்சில் (ஐஜிபிசி) சான்றளிக்கப்பட்டன. மும்பையில் உள்ள பாந்த்ரா-குர்லா வளாகத்தில் (பிகேசி) உள்ள ஐசிஐசிஐ சேவை மையம் 2024 நிதியாண்டில் 'நிகர பூஜ்ஜிய கழிவு' சான்றளிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. மேலும், முந்தைய ஆண்டை விட 2024 நிதியாண்டில் வங்கி அதன் புதுப்பிக்கத் தக்க எரிசக்தி நுகர்வை நான்கு மடங்காக 75.73 மில்லியன் கிலோவாட் மணியாக உயர்த்தியது. 2022 நிதியாண்டில் இருந்து 3.7 மில்லியன் மரங்களை நட்டது மற்றும் பள்ளிகள் மற்றும் நீர்நிலைகளில் ஆண்டுதோறும் 25.8 பில்லியன் லிட்டர் நீர் சேகரிப்பு திறனை உருவாக்கியது.

*நோக்கம் 1 : உமிழ்வுகள் என்பது ஒரு நிறுவனத்தால் கட்டுப்படுத்தப்படும் அல்லது சொந்தமான மூலங்களிலிருந்து ஏற்படும் நேரடி பசுமை இல்ல (ஜிஹெச்ஜி) உமிழ்வுகள் ஆகும். *ரோக்கம் 2 : உமிழ்வுகள் என்பது மின்சாரம், நீராவி, வெப்பம் அல்லது குளிரூட்டல் வாங்குவதோடு தொடர்புடைய மறைமுக பசுமை இல்ல வாயுஉமிழ்வுகள்ஆகும்.

# சென்னையில் அயனாவரம் உட்பட பல்வேறு பகுதிகளில் விலை உயர்ந்த சைக்கிள்களை திருடிய நபர் கைது. 25 விலை உயர்ந்த சைக்கிள்கள் மீட்பு.



சென்னை, 19 பிப்ரவரி 2025: சென்னை, அயனாவரம், என்எம்கே தெரு, வேல் காம்ப்ளக்ஸ், பகுதியில் திவேஷ், வ/20, த/பெ.தீனதயாளன் என்பவர் வசித்து வருகிறார். கடந்த 25.11.2024 அன்று மாலை மேற்படி திவேஷ் அவரது வீட்டின் முன்பு, சொந்த உபயோகத் திற்காக பயன்படுத்தி வரும் ஹீரோஸ் பிரின்ட் சைக்கிளை நிறுத்தி விட்டு சிறிது நேரம் கழித்து வந்து பார்த்த போது, அவரது சைக்கிளை அடையாளம் தெரியாத நபர் யாரோ திருடிச்சென்றது தெரியவந்தது. இது குறித்து திவேஷ் கே-2 அயனாவரம் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் வழக்குப் பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

கே-2 அயனாவரம் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி சைக்கிள் திருட்டு வழக்கில் சம்பந்தப்பட்ட வெங்கடேஷ், வ/59, த/பெ.தர்மராஜ், சி.வி.ராமன் தெரு, ஊரப்பாக்கம், சென்னை என்பரை 17.02.2025 அன்று கைது செய்தனர். மேலும் விசாரணையில் கைது செய்யப்பட்ட வெங்கடேஷ் சென்னையில் கோடம்பாக்கம், அரும்பாக்கம், அயனாவரம் மற்றும் கொளத்தூர் பகுதிகளில் சைக்கிள்களை திருடி விற்பனை செய்துள்ளது தெரியவந்தது. அவரிடமிருந்து புகார்தாரரின் சைக்கிள் உட்பட விலை உயர்ந்த 25 சைக்கிள்கள் மீட்கப்பட்டது. மேலும் விசாரணையில் கைது செய்யப்பட்ட வெங்கடேஷ் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருவதும், இவர் மீது ஏற்கனவே 4 சைக்கிள் திருட்டு வழக்குகள் உள்ளதும் தெரியவந்தது. கைது செய்யப்பட்ட எதிரி வெங்கடேஷ் விசாரணைக்குப் பின்னர் 17.02.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

## சமூகங்கள் முழுவதும் ஆயிரக்கணக்கானோரின் வாழ்க்கைகளில் மாற்றத்தை ஏற்படுத்துகின்ற வகையில் எஸ்எம்எஃப்ஜி இந்தியா கிரெடிட் நிறுவனம், தமிழ்நாட்டில் சிஎஸ்ஆர் முன்முயற்சிகளை வலுப்படுத்துகிறது



சென்னை, 19 பிப்ரவரி 2025: எஸ்எம்எஃப்ஜி இந்தியா கிரெடிட் நிறுவனம் தமிழ்நாட்டில் கார்ப்பரேட் சமூகப் பொறுப்பு (சிஎஸ்ஆர்) மீதான தனது உறுதியான அர்ப்பணிப்பைத் தொடர்கிறது. இது, பெண்களின் வாழ்வாதார மேம்பாடு, ஆரம்ப சுகாதார பராமரிப்பு, நிதியியல் கல்வியறிவு, விலங்கு நலன் மற்றும் சமூக ஆதரவு ஆகியவற்றின் மீது கவனம் செலுத்துகின்ற முனைப்புகள் மூலம் வாழ்க்கைகளை நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்துகிறது.

பல ஆண்டுகளாக, இந்த நிறுவனம் தமிழ்நாட்டில் பல முக்கிய திட்டங்களை அறிமுகப்படுத்தி விரிவாக்கியுள்ளது. எங்களின் ஆரம்ப சுகாதார சேவைகள் திட்டமான நிர்மயா திட்டத்தின் கீழ், சேவை குறைந்த சமூகங்களுக்கு அத்தியாவசிய மருத்துவ சேவைகளை வழங்குகிற, தமிழ்நாட்டில் செயல்பட்டு வருகின்ற 3 மொபைல் ஹெல்த் வேன்களை (எம்ஹெச்விஎஸ்) நாங்கள் கொண்டுள்ளோம். இந்த திட்டத்தின் கீழ், கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாட்டில் 1,40,000 பேருக்கும் மேற்பட்டவர்களுக்கு மருத்துவ ஆதரவை நாங்கள் வழங்கியுள்ளோம்.

நிதியியல் கல்வியறிவு என்பது எஸ்எம்எஃப்ஜி இந்தியா கிரெடிட் நிறுவனத்தின் முக்கிய கவனம் செலுத்தும் ஒரு துறையாகும். சக்கி திட்டத்தின் வழியாக, பெண்களிடையே நிதியியல் விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றதன் மூலம், அவர்களின் மேம்பாடு மற்றும் சமூக உள்ளடக்கம் ஆகியவற்றை ஊக்குவிக்கின்ற வகையில் நாங்கள் பெண்களுக்கு அதிகாரமளித்துள்ளோம். இந்த முன்முயற்சியின் கீழ், கடந்த ஆண்டு மட்டும் சுமார் 20,000 பெண்களுக்கு பயிற்சி அளித்துள்ளோம்.

எஸ்எம்எஃப்ஜி இந்தியா கிரெடிட் நிறுவனம் அதன் க்ரிஷி மித்ரா முன்முயற்சி மூலம் நிலையான விவசாயம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பை ஊக்குவிக்கிறது. இந்த திட்டத்தின் கீழ், கடந்த மூன்று ஆண்டுகளாக தமிழ்நாட்டில் 22,000க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு கரிம விவசாயம், நிலையான விவசாய முறைகள் மற்றும் விவசாய சந்தைப்படுத்தல் ஆகியவை குறித்து நாங்கள் யிற்சி அளித்துள்ளோம்.

யுவா கௌஷல் முன்முயற்சியானது, கடந்த இரண்டு ஆண்டுகளில் 50 இளைஞர்களுக்கு எஸ்எம்எஃப்ஜி இந்தியா கிரெடிட் உள்ளிட்ட நிறுவனங்களில் தொழில் வாய்ப்புகளை அணுக அவர்களுக்கு உதவுகின்ற திறன் மேம்பாடு செய்துள்ளது. இதேபோல், ஜீவிகா என்ற ஒரு வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 700க்கும் மேற்பட்ட பெண்களுக்கு அவர்களின் சொந்த தொழில்களை நிறுவ அவர்களை தயார்படுத்துகின்ற தையல் பயிற்சி அளித்துள்ளது.

எங்களின் முதன்மை கால்நடை பராமரிப்புத் திட்டமான பசு விகாஸ் தினம் (பிவிடி) என்ற இந்த திட்டம், கடந்த இரண்டு ஆண்டுகளாக தமிழ்நாட்டில் சுமார் 30,000 கால்நடைகளுக்கு பலனளித்துள்ளது. இந்த முன்முயற்சி, தி வேர்ல்டு ரெக்கார்ட்ஸ் யூனியன் போன்ற குறிப்பிடத்தக்க அங்கீகாரங்களைப் பெற்றுள்ளது.

கிராமப்புற சமூகங்களுக்கான நமது உறுதிப்பாட்டை மேலும் முன்னெடுத்துச் செல்கின்ற வகையில், (சிஎஸ்ஆர்) என்ற எங்களின் பணியாளர் மையப்படுத்தப்பட்ட முன்முயற்சியானது, திறன் மேம்பாடு மற்றும் நன்கொடைகள் மூலம் தமிழ்நாட்டில் 42,000க்கும் மேற்பட்ட மக்களுக்கு பலனளித்துள்ளது. இந்த திட்டத்தின் கீழ், பல ஆண்டுகளாக வெள்ள பாதிப்புக்குள்ளானவர்களுக்கு நிவாரண பொருட்களை விநியோகித்து வெள்ள நிவாரணப் பணிகளையும் மேற்கொண்டுள்ளோம்.

இந்த முன்முயற்சிகள் குறித்து பேசிய எஸ்எம்எஃப்ஜி இந்தியா கிரெடிட் நிறுவனத்தின் சீஃப் ஆப்பரேட்டிங் ஆஃபீசர் திரு. சுவாமிநாதன் சுப்பிரமணியன் கூறுகையில்: "எங்களின் சமூக மேம்பாட்டுத் திட்டங்கள், மாற்றத்திற்கான உந்துவிசையாக செயல்பட்டு, கிராமப்புற வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கும், ஒட்டுமொத்த வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும், மற்றும் வருமான வாய்ப்புகளை அதிகரிப்பதற்கும் கவனம் செலுத்துகின்றன. நாங்கள் சேவை செய்யும் சமூகங்களின் முழுமையான நலனுக்கு பங்களிக்கின்ற வகையில் திறன் மேம்பாடு மற்றும் நிதியியல் கல்வியறிவை நாங்கள் தீவிரமாக ஊக்குவிக்கின்றோம். எஸ்எம்எஃப்ஜி இந்தியா கிரெடிட் நிறுவனத்தில், புதுமையான மற்றும் நிலையான சமூக-பொருளாதார முன்முயற்சிகள் வழியாக, சேவை செய்யப்படாத சமூகங்களில் உள்ளடக்கிய வளர்ச்சியை ஊக்குவிப்பதன் மூலம், எங்களின் வாடிக்கையாளர்களுடன் ஒரு வலுவான தொடர்பை ஏற்படுத்துவதற்கு நாங்கள் அர்ப்பணிக்கப்பட்டுள்ளோம்." என்று கூறினார்.

## எம்.கே.பி.நகர் பகுதியில் வீட்டின் நிறுத்தியிருந்த சைக்கிள் மற்றும் தண்ணீர் மோட்டாரை திருடிக் கொண்டு தப்ப முயன்ற 3 நபர்கள் கைது. சைக்கிள் மற்றும் தண்ணீர் மேட்டார் மீட்பு. 1 மோட்டார் சைக்கிள் பறிமுதல்.








சென்னை, 19 பிப்ரவரி 2025: சென்னை, வியாசர்பாடி, முல்லை நகர், 21வது பிளாக்கில் உள்ள வீட்டில் நிவேதா, பெ/வ.35, க/பெ.தாஸ் என்பவர் குடும்பத்துடன் வசித்து வருகிறார். நிவேதா 17.02.2025 அன்று காலை வீட்டின் வெளியே வந்தபோது, அங்கு நிறுத்தியிருந்த அவரது மகனின் சைக்கிள் மற்றும் அங்கிருந்த தண்ணீர் மோட்டாரையும் 4 நபர்கள் திருடிக் கொண்டு தப்ப முயன்றபோது, நிவேதா சத்தம் போடவே அருகில் வசிக்கும் நபர்கள் ஓடி வந்தபோது, ஒரு நபர் தப்பியோடவே மற்ற 3 நபர்களை மடக்கிப் பிடித்து, சைக்கிள் மற்றும் தண்ணீர் மோட்டாரை கைப்பற்றி பி-5 எம்.கே.பி.நகர் காவல் நிலையத்தில் ஒப்படைத்ததின் பேரில், விசாரணை மேற்கொள்ளப்பட்டது. பி-5 எம்.கே.பி.நகர் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் விசாரணை செய்ததில், பிடிபட்ட நபர்கள் 1.சஞ்சய், வ/23, த/பெ.விஜயகுமார், பாரதி நகர் 11வது தெரு, கொருக்குப் பேட்டை, சென்னை, 2.பிரவீன்குமார், வ/21, த/பெ.பாஸ்கர், 82வது பிளாக், சத்தியமூர்த்தி நகர், வியாசர்பாடி, சென்னை, 3.முகமது அ௲பிர், வ/19, த/பெ.மாபூப் பாஷா, திதி பிளாக், வியாசர்பாடி என்பதும், இவர்கள் மூவரும் இவர்களது கூட்டாளி விக்கி என்பவருடன் சேர்ந்து மேற்படி வீட்டின் முன்பு நிறுத்தியிருந்த சைக்கிள் மற்றும் அங்கு பொருத்தியிருந்த தண்ணீர் மோட்டாரை திருடிக் கொண்டு தப்ப முயன்ற போது பிடிபட்டதும் தெரியவந்தது.

அதன்பேரில், நிவேதா கொடுத்த புகார் மீது பி-5 எம்.கே.பி.நகர் காவல் நிலைய குற்றப்பிரிவில் வழக்குப் பதிவு செய்து, எதிரிகள் மூவரும் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து சைக்கிள் மற்றும் தண்ணீர் மோட்டார் மீட்கப்பட்டு, இவர்கள் குற்றச் செயலுக்கு பயன்படுத்திய 1 மோட்டார் சைக்கிள் பறிமுதல் செய்யப்பட்டது.

மேலும் விசாரணையில் எதிரிகள் சஞ்சய் மற்றும் பிரவீன்குமார் ஆகியோர் பி-5 எம்.கே.பி.நகர் காவல் நிலைய சரித்திர பதிவேடு குற்றவாளிகள் என்பதும், சஞ்சய் ணிது 1 கொலை, திருட்டு, வழிப்பறி என சுமார் 8 குற்ற வழக்குகளும், பிரவீன்குமார் மீது 1 கொலை, திருட்டு, வழிப்பறி, கஞ்சா என சுமார் 11 குற்ற வழக்குகளும் உள்ளது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரிகள் மூவரும் விசாரணைக்குப் பின்னர் 17.02.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டனர்.

## சன்ஃபீஸ்ட் நுகர்வோருக்கு அறிமுகப்படுத்துகிறது 14 மிருதுவான அடுக்குகள் மற்றும் ஒரு சீஸி மகிழ்ச்சி கொண்ட ‘வாவ்’




சென்னை, 19 பிப்ரவரி 2025: பிஸ்கட் பிரிவில் நுகர்வோருக்கு வேறுபட்ட சுவையான அனுபவங்களைக் கொண்டுவருவதில் பெயர் பெற்ற ஐடிசியின் சன்ஃபீஸ்ட், அதன் சமீபத்திய வெளியீட்டை அறிவிக்கிறது - சன்ஃபீஸ்ட் வாவ்ஸர்ஸ். நொறுங்குதல் மற்றும் மகிழ்ச்சியான சுவைகளின் இணையற்ற கலவையுடன் கிராக்கர் பிரிவை மறுவரையறை செய்ய வடிவமைக்கப்பட்டுள்ளது, சன்ஃபீஸ்ட் வாவ்ஸர்ஸ் ஸ்நாக்ஸ் நேரத்தை மறுவரையறை செய்வதற்கும், சுவையான கிராக்கர்ஸ் வகைக்கு இனிமையான, மகிழ்ச்சியான திருப்பத்தைக் கொண்டுவருவதற்கும் விரும்புகிறது.

கிராக்கர்ஸ்களில் நுகர்வோர் முன்னுரிமையைத் தூண்டும் முக்கிய காரணிகளில் ஒன்றாக 'நொறுங்குதல்' விளங்குகிறது, மேலும் சன்ஃபீஸ்ட் வோஸர்ஸ் குறிப்பிடத்தக்க 14-அடுக்கு வடிவமைப்பைக் கொண்டுள்ளது, இது விதிவிலக்கான மிருதுவான தன்மையையும் மகிழ்ச்சியான அமைப்பையும் வழங்குகிறது. வழக்கமான சுவைகளிலிருந்து விலகி, சன்ஃபீஸ்ட் வாவ்ஸர்ஸ் இரண்டு மகிழ்ச்சியான வகைகளை அறிமுகப்படுத்துகிறது - சீஸ் க்ரீம் கிராக்கர் மற்றும் லெமன் க்ரீம் கிராக்கர்.

இந்த தனித்துவமான சுவைகள், கூடுதல் மகிழ்ச்சிக்காக இனிப்புடன் சேர்ந்த மற்றும் 14 மிருதுவான அடுக்குகளுடன் இணைந்து, ஒரு உண்மையான மல்டி டெக்ஸ்ச்சரல் அனுபவத்தை அளிக்கிறது, இது இல்லத்தரசிகள் தங்கள் குடும்பங்களுக்கும், பயணத்தின் போது மகிழ்ச்சியைத் தேடும் இளைஞர்களுக்கும் மகிழ்ச்சியான விருந்துகளுக்கும் பொருத்தமானது.

தயாரிப்பின் அறிமுகத்துடன் சேரத்து, இந்த கேம்-சேஞ்சிங் ஸ்நாக்கின் சுவையை பிரதிபலிக்கும் ஒரு அற்புதமான புதிய விளம்பர பிரச்சாரத்தையும் பிராண்ட் வெளியிட்டுள்ளது. ஆக்லிவி, திவிசி, 'இஸ்கே ஹர் பைட் மே ஹை வாவ்!' என்ற டேக்லைனுடன் கருத்துருவாக்கம் செய்யப்பட்டது. சமீபத்திய வெளியீடு குறித்து கருத்து தெரிவித்த ஐடிசி லிமிடெட், பிஸ்கட் மற்றும் கேக்ஸ் கிளஸ்டரின் தலைமை இயக்க அதிகாரி திரு. அலி ஹாரிஸ்ஷெர், "சன்ஃபீஸ்ட் வாவ்ஸர்ஸ் என்பது ஒரு ஸ்நாக்கை விட கூடுதலானது; இது ஒரு உணர்ச்சி அனுபவமாகும், இது பிரீமியம் கிரன்ச்சை உறுதியான, மகிழ்ச்சியான சுவைகளுடன் இணைக்கிறது. இந்த அறிமுகத்தின் மூலம், கிராக்கர் பிரிவில் ஒரு புதிய அளவுகோலை அமைத்து, வளர்ந்து வரும் நுகர்வோர் விருப்பங்களை பூர்த்தி செய்கிறோம்."

ஒகில்வி தெற்கின் தலைமை படைப்பாற்றல் அதிகாரி திரு. புனீத் கபூர் கூறுகையில், "புட்டிங்கின் ஆனந்தம் அதனை சுவைப்பதில் உள்ளது. வாவ்ஸர்ஸ௲டன், கிராக்கர் நடைமுறையில் அது ஒரு புதிய கதையை எழுதும் அளவுக்கு சுவை மிகுந்தது 14 மொறுமொறுப்பான, ஃப்ளேக்கி லேயர்களுடன், அதன் சீஸ் நிறைந்த சுவை, மொட்டுகளை சிலிர்க்க வைக்கும். இது ஸ்நாக்ஸ் மட்டுமல்ல; ஒரு முழுமையான மனநிலையும் கூட. இயற்கையாகவே, இந்த புதுமையான படைப்பின் வடிவத்தில் ஒரு மிகையான சுவையும் நமக்குத் தேவைப்படுகிறது. எனவே, கிராக்கர்களின் பரந்த ஃப்ளேவர் புரொஃபைலுடன் பொருந்தக்கூடிய ஒரு துடிப்பான பிரதிநிதித்துவத்தை செய்வதற்காக நாங்கள் இந்த விளம்பரத்தை தயாரித்துள்ளோம். ஏனென்றால், வாவ்ஸர்களின் பேச்சு எழும்போதெல்லாம் அது மெனுவில் இடம்பெற வேண்டும்."

சன்ஃபீஸ்ட் வாவ்ஸர்ஸ் தற்போது தமிழ்நாடு, கேரளா, மகாராஷ்டிரா, ஆந்திரா, தெலுங்கானா, மேற்கு வங்கம் மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது, அதைத் தொடர்ந்து நாட்டின் பிற பகுதிகளுக்கும் விரிவாக்கம் செய்யப்படுகிறது.

இந்த தயாரிப்பு பொது வர்த்தகம், நவீன வர்த்தகம், விரைவான டெலிவரி தளங்கள் மற்றும் ஐடிசி ஸ்டோர் ஆகிய இரண்டு வசதியான அளவுகளில் கிடைக்கும்: ரூ. 5 விலையில் 16 கிராம் பேக் மற்றும் ரூ. 60 விலையில் 128 கிராம் பேக்

## கோயம்புத்தூர் எம்எஸ்எம்இஸ் உலகளாவியதாக மாறுகின்றன: ஜிஐஏசிசி-கொடிசியா கூட்டாண்மை



கோயம்புத்தூர் 19, பிப்ரவரி 2025: ஜார்ஜியா இந்தோ-அமெரிக்க வர்த்தக சபையின் (ஜி.ஐ.ஏ.சி.சி) 21 பேர் கொண்ட தூதுக்குழு “உலகளாவிய சந்தையில் கோயம்புத்தூர் எம்எஸ்எம்இ களை மேம்படுத்துதல்” என்ற தலைப்பில் ஒரு பெரிய வணிக மாநாட்டிற்காக கோயம்புத்தூர் வருகை தந்தது. இந்திய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் அமைச்சகத்தின் (எம்.எஸ்.எம்.இ) ஆதரவுடன் கோயம்புத்தூர் மாவட்ட சிறு தொழில்கள் சங்கம் (கொடிசியா) ஏற்பாடு செய்த நான்கு நாள் நிகழ்வு, இந்தியா மற்றும் அமெரிக்கா இடையேயான வர்த்தக மற்றும் முதலீட்டு உறவுகளை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது.

இரு நாடுகளிலிருந்தும் முக்கிய பங்குதாரர்களை ஒன்றிணைத்து, இந்த மாநாடு வணிக ஒத்துழைப்பை விரிவுபடுத்துவது குறித்த அர்த்தமுள்ள விவாதங்களை உருவாக்கியது. ஜி.ஐ.ஏ.சி.சி தூதுக்குழுவில் பெருநிறுவன சட்ட சேவைகள், ரியல் எஸ்டேட், ஏற்றுமதி-இறக்குமதி தளவாடங்கள், தொலைத்தொடர்பு, தொழில்நுட்பம் மற்றும் வங்கி போன்ற பல்வேறு தொழில்களின் நிபுணர்கள் இருந்தனர். ஜோர்ஜியாவில் இருந்து அரசாங்க அதிகாரிகளும் பங்கேற்றனர், இருதரப்பு வர்த்தக உறவுகளை வலுப்படுத்துவதற்கான உறுதிப்பாட்டை மேலும் வலியுறுத்தினர். இந்த நிகழ்வின் முக்கியத்துவத்தை உணர்ந்து, அட்லாண்டாவில் உள்ள இந்திய தூதரகம் சமூக ஊடக தளமான எக்ஸ் இல் அதை ஒப்புக் கொண்டது, “கோயம்புத்தூர் மற்றும் அதற்கு அப்பால் உள்ள எம்.எஸ்.எம்.இ.களுக்கு புதிய வணிக வாய்ப்புகளை உருவாக்குவதை இந்த மாநாடு நோக்கமாகக் கொண்டுள்ளது.” கலந்துரையாடல்கள் மற்றும் நெட்வொர்க்கிங் அமர்வுகள் மூலோபாய வணிக கூட்டாண் மைகளை எளிதாக்கி, நீண்டகால ஒத்துழைப்புக்கு வழி வகுத்தது.

நீலகிரி தயாரிப்புகளை அமெரிக்க சந்தையில் அறிமுகப்படுத்துவதில் கவனம் செலுத்தும் ஜி.ஐ.ஏ.சி.சி மற்றும் கொடிசியா இடையே புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது இந்த நிகழ்வின் முக்கிய சிறப்பம்சமாகும். சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களை (எஸ்எம்இஸ்) அவற்றின் உலகளாவிய வரம்பை மேம்படுத்துவதன் மூலம் ஆதரிப்பதற்கான வெளியுறவு அமைச்சகத்தின் (எம்இஏ) முயற்சிகளுடன் இந்த முயற்சி ஒத்துப்போகிறது. சர்வதேச வர்த்தக பிரதிநிதிகளுடன் தீவிர ஈடுபாட்டின் மூலம், வெளியுறவு அமைச்சகம் தமிழ்நாட்டின் தொழில்கள் உலகச் சந்தையில் செழித்து வளர புதிய வழிகளை தொடர்ந்து உருவாக்கி, எல்லை தாண்டிய வர்த்தகம் மற்றும் பொருளாதார கூட்டாண்மைகளை செயல்படுத்துவதற்கான இந்தியாவின் உறுதிப்பாட்டை வலுப்படுத்துகிறது.

# அப்போலோ ஃபர்ஸ்ட் மெட் மருத்துவமனை மேம்பட்ட நவீன நுண் அறுவை சிகிச்சை முறையைப் பயன்படுத்தி சிக்கலான விரல் மறுசீரமைப்பு அறுவை சிகிச்சைகளை வெற்றிகரமாகச் செய்துள்ளது!

சென்னை 19, பிப்ரவரி 2025: பல்வேறு விபத்துகளால் விரல் துண்டிக்கப்பட்ட பல நோயாளிகளுக்கு அப்போலோ ஃபர்ஸ்ட் மெட் மருத்துவமனை [அப்போலோ ஃபர்ஸ்ட் மெட் ஹாஸ்பிடல்] வெற்றிகரமாக மறுசீரமைப்பு அறுவை சிகிச்சைகளைச் [ரீபிளேன்டேஷன் சர்ஜரி] செய்துள்ளது. திறன் வாய்ந்த பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை நிபுணர்கள் டாக்டர் வி புருஷோத்தமன், டாக்டர் சபரி கிரிஷ் அம்பாட் ஆகியோரின் தலைமையில், இந்த நடைமுறைகள் நோயாளிகளின் கை விரல்களின் செயல்பாட்டை மீட்டெடுத்துள்ளது மட்டுமல்லாமல், சாதாரண அன்றாட நடவடிக்கைகளில் மீண்டும் ஈடுபடுவதற்கான திறனையும் வழங்கியுள்ளன.




ஒவ்வொரு நோயாளிக்கும் பல மணி நேரங்கள் மேற்கொள்ளப்படும் மறுசீரமைப்பு அறுவை சிகிச்சைகள், சிறிய விரல்கள் உட்பட துண்டிக்கப்பட்ட விரல்களை மீண்டும் இணைப்பதை உள்ளடக்கியதாகும். இவை கவனமாக மீண்டும் கையுடன் இணைக்கப்படுகின்றன. அதிநவீன நுண் அறுவை சிகிச்சை (மைக்ரோசர்ஜிகல்) கருவிகள், சூப்பர்-மைக்ரோசர்ஜிகல் நுட்பங்களைப் [மைக்ரோ சர்ஜிகல் டூல்ஸ் & சூப்பர் மைக்ரோசர்ஜிகல் டெக்னிக்ஸ், திசர்ஜன்ஸ் கேர்ஃபுலி ரீகனெக்ட்டேட் போன்ஸ், டென்டான்ஸ், நெர்வ்ஸ் அண்ட் பிளட் வெசல்ஸ், ரீஸ்டோரிங் பிளட் ஃப்ளோ] பயன்படுத்தி, அறுவை சிகிச்சை நிபுணர்கள் எலும்புகள், தசைநாண்கள், நரம்புகள், ரத்த நாளங்களை கவனமாக மீண்டும் இணைத்து, ரத்த ஓட்டத்தை மீட்டெடுத்து, கை செயல்பாட்டை உறுதி செய்துள்ளனர். அறுவை சிகிச்சைகளைத் தொடர்ந்து, அனைத்து நோயாளிகளும் தங்கள் கைகளையும் விரல்களையும் முழுமையாகப் பயன்படுத்தி சிறந்த மறுவாழ்வு பெற்றுள்ளனர்.

அப்போலோ ஃபர்ஸ்ட் மெட் மருத்துவமனையின் பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் வி. புருஷோத்தமான், [பிளாஸ்டிக் சர்ஜன், அப்போலோ ஃபர்ஸ்ட் மெட் ஹாஸ்பிடல்] வெட்டப்பட்ட பகுதியை மறுசீரமைப்புக்காகப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை விளக்கினார். அவர் கூறுகையில் “உறுப்புச் சிதைவுகளைக் கையாண்டு சிகிச்சை அளிக்கும் போது, குறிப்பாக இயந்திரங்கள் அல்லது வீட்டு உபகரணங்களால் ஏற்படும், உறுப்பு சிதைவு பாதிப்புகளின் போது சிகிச்சைக்கு வரும் நேரம் முக்கியமானது. விரைந்து சிகிச்சை பெற வர வேண்டும். துண்டிக்கப்பட்ட பகுதியை பாதுகாப்பது முக்கியம். மேலும் அது அறுவை சிகிச்சைக்கு ஏற்றதாக இருப்பதை உறுதி செய்ய உடனடியாக சரியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். சூப்பர்-மைக்ரோசர்ஜரி முன்னேற்றங்கள் நல்ல பலன்களைக் கொடுக்கும். இப்போது விரல் துண்டிப்பு உட்பட மிகச் சிறிய துண்டிக்கப்பட்ட பாகங்களைக் கூட அதிக அளவில் வெற்றிகரமாக மீண்டும் பொருத்த முடிகிறது.” என்றார்.

அப்போலோ ஃபர்ஸ்ட் மெட் மருத்துவமனையின் பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை மூத்த நிபுணர் டாக்டர் சபரி கிரிஷ் அம்பட் [சீனியர் கன்சல்டன்ட் இன் பிளாஸ்டிக் சர்ஜரி, அப்போலோ ஃபர்ஸ்ட் மெட் ஹாஸ்பிடல்] கூறுகையில், “நோயாளிகளின் குடும்பத்தினருக்கும் மருத்துவமனை குழுவினரின் விரைவான செயல்பாடுகள் பாராட்டத்தக்கவை. நாங்கள் மறுசீரமைப்பை மேற்கொள்ள மிக விரைவாக செயல்படுகிறோம். இதன் மூலம் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் கை செயல்பாட்டை வெற்றிகரமாக மீட்டெடுக்க முடிந்துள்ளது. துண்டிக்கப்பட்ட பகுதியை குளிர்ச்சிப்படுத்துவது முதல் அதை எங்களது அறுவை சிகிச்சைக் குழுவிடம் கொண்டு செல்வது வரை ஒவ்வொரு படியும் வெற்றிகரமான முடிவுக்கான வாய்ப்புகளை கணிசமாக அதிகரிக்கிறது. சூப்பர்-மைக்ரோசர்ஜரி செயல்பாடு நுணுக்கமான துல்லிய செயல்பாட்டை உள்ளடக்கியது. ஒரு காலத்தில் சரிசெய்ய முடியாத அளவுக்கு சிறியதாகக் கருதப்பட்ட விரல் நுனி உறுப்பு துண்டிப்பைக் கூட இப்போது மீண்டும் பொருத்தி செயல்பட வைக்க முடிகிறது.” என்றார்.

சாலை விபத்துகள், தொழிற்சாலை விபத்துகள், சமையலறை விபத்துக்கள், கதவுகளின் இடையே கைகள் சிக்கி பாதிப்பு ஏற்படுதல் போன்ற விபத்துகளால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் உடனடியாக அப்போலோ ஃபர்ஸ்ட் மெட் மருத்துவமனையின் அவசர சிகிச்சை மையத்திற்கு கொண்டு வரப்பட்டனர். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், முக்கியமான முதல் படி, துண்டிக்கப்பட்ட பகுதியை பாதுகாப்பதும், மருத்துவமனைக்கு கொண்டு செல்வதும் ஆகும். இது வெற்றிகரமான மறுசீரமைப்பு அறுவை சிகிச்சைகளை செய்ய மருத்துவ குழுவுக்கு உதவுகிறது. ஒரு காலத்தில் சரிசெய்ய முடியாததாகக் கருதப்பட்ட சிறிய, துண்டிக்கப்பட்ட விரல் நுனிகள் கூட மேம்பட்ட சூப்பர்-மைக்ரோசர்ஜரி நுட்பங்கள் மூலம் வெற்றிகரமாக இப்போது மீண்டும் இணைக்கப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

மறுசீரமைப்பு அறுவை சிகிச்சைக்காக, துண்டிக்கப்பட்ட பகுதியை பாதுகாப்பதற்கான முக்கிய நடவடிக்கைகள்: துண்டிக்கப்பட்ட பகுதியை பாதுகாக்கும் செயல்முறை பல முக்கிய படிகளை உள்ளடக்கியது.

ரத்தப்போக்கைக் கட்டுப்படுத்துதல்: உறுப்பு துண்டிக்கப்பட்ட இடத்தில் ரத்தப்போக்கை நிறுத்த வேண்டும். முடிந்யூால் காயமடைந்த பகுதியை சற்று உயரமாக வைத்திருக்க வேண்டும். துண்டிக்கப்பட்ட பகுதியை சரியாகப் பாதுகாத்தல்: துண்டிக்கப்பட்ட பகுதியை ஒரு சுத்தமான துணி அல்லது கிருமிகள் அற்ற மென்மையான துணியில் வைத்து ஒரு பிளாஸ்டிக் பை அல்லது சுத்தமான ஒரு பெட்டியில் வைக்க வேண்டும். குளிரூட்டுதல், உறைய வைத்தல் அல்ல: துண்டிக்கப்பட்ட பகுதியைச் சுற்றி சிறிய ஐஸ் கட்டிதுகள்களைப் பயன்படுத்தி குளிர்ச்சியாக வைத்திருக்க வேண்டும். ஆனால் ஐஸ் கட்டியுடன் அந்த துண்டிக்கப்பட்ட உறுப்பு நேரடியாக தொடர்பில் இருக்கக்கூடாது. அப்படி நேரடி தொடர்பு ஏற்பட்டால் திசு சேதம் ஏற்படக்கூடும். விரைவாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லுதல்: துண்டிக்கப்பட்ட பகுதியை 4 முதல் 6 மணி நேரத்திற்குள் மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல வேண்டும். மறுசீரமைப்பு செய்து அதை மீண்டும் பொருத்த விரைவான முறையில் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட வேண்டும். அதை உறுதிப்படுத்த விரைவான போக்குவரத்து அவசியம். இந்த வெற்றிகரமான மறுசீரமைப்பு அறுவை சிகிச்சைகள் விபத்து சிகிச்சை, நுண் அறுவை சிகிச்சை பராமரிப்பு ஆகியவற்றில் அப்போலோ ஃபர்ஸ்ட் மெட் மருத்துவமனையின் முன்னணி நிலையை எடுத்துக் காட்டுகின்றன. அர்ப்பணிப்புள்ள மருத்துவ நிபுணர்களின் குழுவும் நவீன தொழில்நுட்பங்களும் இங்கு உள்ளதால், தேவைப்படும் நோயாளிகளுக்கு வாழ்க்கையை சிறப்பாக மாற்றி அமைக்கும் சிகிச்சைகளை வழங்குவதில் இந்த மருத்துவமனை முன்னணியில் உள்ளது.

கை அறுவை சிகிச்சை, நுண் அறுவை சிகிச்சை அல்லது ஆலோசனை பெறுவது பற்றிய கூடுதல் தகவலுக்கு, சென்னை கீழ்ப்பாக்கத்தில் உள்ள அப்போலோ ஃபர்ஸ்ட் மெட் மருத்துவமனையின் பிளாஸ்டிக் அறுவை சிகிச்சைத் துறையை இந்த எண்களில் தொடர்பு கொள்ளலம்: 04428366075 / 8754470049.

# செம்பியம் பகுதியில் வீண் தகராறு செய்து கத்தியால் தாக்கிய நபர் கைது. கத்தி பறிமுதல்.

சென்னை, 19 பிப்ரவரி 2025: சென்னை, பெரம்பூர், கக்கன்ஜி காலனி 5வது தெருவில் வசித்து வரும் ஜீவானந்தம், வ/23, த/பெ.சந்திரசேகர் என்பவர் தனியார் நிறுவனத்தில் தனது சொந்த காரை வைத்து கார் ஓட்டி வருகிறார். ஜீவானந்தம் கடந்த 16.02.2025 அன்று இரவு வீட்டிலிருந்து வெளியே கிளம்பியபோது, அங்கு நின்றிருந்த அப்பகுதியைச் சேர்ந்த கில்பர்ட் ராஜ் என்பவர் ஜீவானந்தத்தை வழிமறித்து தகாத வார்த்தைகளால் பேசி வீண் தகராறு செய்து, தான் மறைத்து வைத்திருந்த கத்தியால் ஜீவானந்தத்தின் தலையில் தாக்கினார். உடனே ஜீவானந்தம் சத்தம் போடவே, பொதுமக்கள் வருவதை கண்ட கில்ப்ர்ட்ராஜ் கத்தியைக் காட்டி மிரட்டி கொலை மிரட்டல் விடுத்து அங்கிருந்து தப்பிச் சென்றார். இரத்தக் காயமடைந்த ஜீவானந்தம் ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற பின்னர் மேற்படி சம்பவம் குறித்து கே-1 செம்பியம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின் பேரில், போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

கே-1 செம்பியம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி வழக்கில் தொடர்புடைய கில்பர்ட்ராஜ், வ/18, த/பெ.ஆல்ரெட்ஜ் சைமன், ரங்கம்மாள் கோயில் தெரு, 5வது தெரு, கக்கன்ஜி காலனி, வியாசர்பாடி, சென்னை என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து குற்றச் செயலுக்கு பயன்படுத்திய 1 கத்தி பறிமுதல் செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்ட எதிரி கில்பர்ட்ராஜ் விசாரணைக்குப் பின்னர் 17.02.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

# வண்ணாரப்பேட்டை மற்றும் ஐ.சி.எப். பகுதியில் சட்டவிரோதமாக கஞ்சா மற்றும் மதுபாட்டில்கள் விற்பனை செய்த ஒரு பெண் உட்பட 3 நபர்கள் கைது. 1.25 கிலோ கஞ்சா, 88 மதுபாட்டில்கள், பணம் ரூ.920/- மற்றும் 1 இருசக்கர வாகனம் பறிமுதல்.

சென்னை, 19 பிப்ரவரி 2025: சென்னை பெருநகர காவல், ஹெச்-1 வண்ணாரப்பேட்டை காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் காவல் குழுவினர், 17.02.2025 அன்று இரவு, வண்ணாரப் பேட்டை, போஜராஜன் நகர் மெயின் தெருவிலுள்ள பொது கழிப்பிடம் அருகே கண்காணித்த போது, கஞ்சா மற்றும் மதுபாட்டில்கள் பதுக்கி வைத்து விற்பனை செய்த 1.சரவணன் (எ) விஜயகாந்த், வ/25, த/பெ.கதிரவன், போஜராஜன் நகர் 2வது தெரு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை, 2.லோகேஷ், வ/29, த/பெ.சுதாகர், யோஜராஜன் நகர் முதல் தெரு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை ஆகிய 2 நபர்களை கைது செய்தனர். அவர்களிடமிருந்து 1.25 கிலோ எடை கொண்ட கஞ்சா, 180 மி.லி. அளவு கொண்ட 54 மதுபாட்டில்கள், பணம் ரூ.500/- மற்றும் 1 இருசக்கர வாகனம் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டது. கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் நேற்று (18.02.2025) நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட உள்ளனர்.



இதே போல, கே-7 ஐ.சி.எப். காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் 17.02.2025 அன்று காலை, ஐ.சி.எப்., இராஜீவ்காந்தி நகர், அவுசிங் போர்டு, இ பிளாக் அருகில் கண்காணித்து, அங்கு சட்டவிரோதமாக மதுபாட்டில்கள் பதுக்கி வைத்து விற்பனை செய்த ஜெயந்தி, பெ/வ.55, க/பெ.ராஜு, ணி பிளாக், இராஜீவ்காந்தி நகர், ஐ.சி.எப்., சென்னை என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 180 மி.லி. அளவு கொண்ட 34 மதுபாட்டில்கள் மற்றும் பணம் ரூ.420/- பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் கைது செய்யப்பட்ட ஜெயந்தி கே-7 ஐ.சி.எப். காவல் நிலைய சரித்திர பதிவேடு குற்றவாளி என்பதும், இவர் மீது மதுபாட்டில்கள் விற்பனை செய்தது தொடர்பாக ஏற்கனவே சுமார் 10 குற்ற வழக்குகள் உள்ளதும் தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரி ஜெயந்தி, விசாரணைக்குப் பின்னர், 17.02.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

# குமரன் நகர் பகுதியில் பெண்ணிடம் இருசக்கர வாகனத்தில் சென்று ஐபோனை பறித்துச் சென்ற ஒரு பெண் உட்பட இருவர் கைது. ஐபோன் மீட்பு. இருசக்கர வாகனம் பறிமுதல்.

சென்னை, 19 பிப்ரவரி 2025: சென்னை, மேற்கு மாம்பலம், கோடம்பாக்கம் சாலையில் வசித்து வரும் செல்வி.ஆஷா பேம், பெ/வ.24 என்பவர் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறார். ஆஷா பேம் கடந்த 05.02.2025 அன்று காலை, வேலைக்கு செல்வதற்காக வீட்டினருகே, கோடம்பாக்கம் சாலையில் கையில் தனது ஐபோனுடன் நின்று கொண் டிருந்த போது, அவ்வழியே இருசக்கர வாகனத்தில் வந்த ஒரு ஆண் மற்றும் பெண், ஆஷா பேம் கையில் வைத்திருந்த ஐபோனை பறித்துக் கொண்டு தப்பிச் சென்றனர். இது குறித்து ஆஷா பேம் ஆர்-6 குமரன் நகர் காவல் நிலைய குற்றப்பிரிவில் புகார் கொடுத்ததின் யேூரில், போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

ஆர்-6 குமரன் நகர் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்தும், சிசிடிவி கேமரா பதிவுகளை ஆய்வு செய்தும், மேற்படி செல்போன் பறிப்பில் ஈடுபட்ட சூர்யா, வ/19, த/பெ.திலீப், தனலட்சுமி நகர் 5வது தெரு, ஆலப்பாக்கம், மதுரவாயல், சென்னை மற்றும் சுஜித்ரா, பெ/வ.20, த/பெ.முருகன், தாழம்பூ தெரு, ஏரிக்கரை, கோவில் பதாகை, ஆவடி, சென்னை ஆகிய இருவரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து புகார்தாரரின் ஐபோன் மீட்கப்பட்டு, குற்றச் செயலுக்கு பயன்படுத்திய டியோ இருசக்கர வாகனம் பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் எதிரி சூர்யா மீது இளஞ்சிறார் பருவத்திலிருந்து இது வரை சுமார் 20க்கும் மேற்பட்ட குற்ற வழக்குகள் உள்ளது தெரியவந்தது.

கைது செய்யப் பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட உள்ளனர்.



சென்னை, 19 பிப்ரவரி 2025: தாம்பரம் சேலையூர் சீயோன் பள்ளியின் 39-வது ஆண்டு விழா, சீயோன் மற்றும் ஆல்வின் பள்ளிக் குழுமங்களின் தலைவர் டாக்டர் என். விஜயன் தலைமையில் நடைபெற்றது. தமிழக அரசின் முன்னாள் தலைமைச் செயலர் டாக்டர் வெ. இறையன்பு சிறப்பு விருந்தினராக பங்கேற்று, மாணவி எம்.எஸ்.தஸ்வந்திகாவிற்கு கல்பனா சாவ்லா விருது வழங்கி வாழ்த்தினார். பள்ளிக் கல்வி துறை முன்னாள் இயக்குநர் அறிவொளி, பள்ளி குழுமங்களின் துணைத் தலைவர் ஆல்டஸ் ஹக்ஸ்லி, இயக்குநர் ரேச்சல் ஹக்ஸ்லி, ஆலோசனை குழு உறுப்பினர்கள் கேப்டன் மூர்த்தி, ராஜ்குமார் செல்லையா, கல்வி ஒருங்கிணைப் பாளர் ரேவதி, தேர்வு கட்டுப்பாட்டாளர் அனிதா அகஸ்டின் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.